# "இலங்கையின் கல்விமுறைமைக்கும் வேலையின்மைப் பிரச்சினைக்கும் இடையிலான தொடர்புகளைப் பகுப்பாய்வு செய்தல்"

**Supervisor**
*Mrs. AR. Sithy Jesmy,*
*Senior Lecturer,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

**Researcher**
*Miss. B. Usha,*
*Department of Social Sciences,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

**ஆய்வுச் சுருக்கம்**

கல்வியென்பது அபிவிருத்திக்கும், சமூக, பொருளாதார மாற்றத்திற்கும் ஓர் பிரதான பங்களிப்பு காரணியாக விளங்குகின்றது. அதாவது சமூக பொருளாதார மாற்றத்திற்கும் நெடுங்காலம் நீடித்திருக்கத்தக்க பொருளாதார மாற்றத்திற்குமான மிகவும் சக்தி வாய்ந்த கருவிகளில் ஒன்றாக கல்வி காணப்படுவதாகும். இதனால் கல்வியினை மையப்படுத்தி பொருளாதாரத்தினை முன்னெடுத்து செல்வதற்கான உலக நாடுகள் தமக்கென ஒரு கல்விமுறைமையினை பின்னற்றத்தொடங்கின(பொருளியல் நோக்கு, ஆவணி/புரட்டாதி, 2010).

இலங்கையின் கல்வி முறைமையானது ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்விக்கான வாய்ப்புக்களை பரவலாக வழங்குவதில் கண்ட வெற்றியானது மூன்றாம் நிலைக்கல்வியை விரிவுப்படுத்துவதில் அடைந்துக்கொள்ளவில்லை. கடந்த பல ஆண்டகளாக இலங்கையின் மூன்றாம் நிலைக் கல்வியின் குறிப்பாக பல்கலைக்கழக கல்வியின் போக்குகளும் விளைவுகளும் 1970இன் பிற்பகுதியில் தொடங்கப்பட்ட திறந்த சந்தைப் பொருளாதார கொள்கைகளுடன் இணைந்து செல்வதாக இருக்கவில்லை. இதனால் விரிவடைந்துவரும் உலகமயமாக்களின் பின்னணியில் இலக்கற்ற கல்விமுறை நாட்டின் தொழிற்சந்தையில் பாரிய மாற்றத்தினை ஏற்படுத்தியது. எவ்வாறெனின், இது நாட்டின் மொத்த வேலையின்னமயில் உயர்ர்கல்வித்தமை கொண்டோர் மத்தியிலான வேலையின்மையினை மிக மோசமாக அதிகரிக்கச் செய்தது(மத்திய வங்கி, ஆண்டறிக்கை, சிறப்புக்குறிப்பு, 2000).

இதனை 1987-2012ம் ஆண்டுவரையிலான ஊழியப்படையின் தரவுகளை கொண்டு அவதானிக்கும் போது, 1987 ஆண்டு மொத்த வேலையின்மையானது 14.1 சதவீதமாக காணப்பட்டது. இதில் க.பொ.த(உ/த) மற்றும் அதைவிட உயர்வான கல்வித்தகைமை கொண்டோரின் வேலையின்மையானது 10.7 சதவீதமாகும். இதனை தொடர்ந்து 1995 ஆண்டு மொத்த வேலையின்மையானது 12.3சதவீதமாவும், 2005ம் ஆண்டு 7.6சதவீதமாவும், 2010ம் ஆண்டு 4.9சதவீதமாவும் நிலவியது (மத்திய வங்கி, 1987-2012). இவ்மொத்த வேலையின்மையில் உயர்ர்கல்வித்தமை கொண்டோர் மத்தியிலான வேலையின்மையானது முறையே 1995 இல் 18.4சதவீதமாகவும், 2000 இல் 25.3சதவீதமாகவும், 2010 இல் 39.7சதவீதமாகவும் காணப்பட்டது(இலங்கை தொகைமதிப்பு புள்ளிவிபரத்திணைக்கள அறிக்கை 1987-2012). இப்புள்ளிவிபரங்கள் வேலையின்னமயானது வீழ்ச்சி போக்கினை காட்டிய போதும் உயர்கல்வித்தகைமையுடையோர் மத்தியிலான வேலையின்மையானது அதிகரித்துச் செல்லும் தன்மையினை கொண்டிருப்பதனையே பிரதிபலிக்கின்றது. இவ்உயர் தொழிலின்மைக்கு தொழிற்சந்தை நிலைமையுடன் சிறிதளவே பொருந்தக்கூடிய நிரம்பலை அடிப்படையாகக்கொண்ட கல்வி முறைமை பின்பற்றப்படுவதே காரணம் என பொதுவாக எடுத்துரைக்கப்படுகின்றது(மத்திய வங்கி ஆண்டறிக்கை, சிறப்புக்குறிப்பு,2000).

எனவே இங்கு எதிர்கால பொருளாதார அபிவிருத்தியை அடிப்படையாக கொண்ட அறிவு சார்ந்த சவால்களை எதிர்கொள்ளத்தக்க விதத்தில் இலங்கையின் பல்கலைக்கழக கல்வியை மீள மாற்றியமைக்கவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக தொழிற்சந்தை தேவைப்பாடுகளுக்கு ஏற்ப நவீன தரமிக்கத் தகுதிகளை ஒருங்கிணைக்கத்தக்க விதத்திலும் மீளமைப்பதும் நவீன தொழிநுட்பங்களை பழகிக்கொள்வதற்கான வழிவகைகளை மேம்படுத்துவதும் சந்தை சார்ந்த கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகப்படுத்துவதும் கிடைக்கத்தக்க சந்தர்ப்பங்களை விரைவுப்படுத்திக் கொள்வதும் பல்கலைக்கழகக்கல்விக்கு அவசியமானவையாகவுள்ளன.

இவ்வாய்வின் பிரதான நோக்கம் இலங்கையின் கல்விமுறைமைக்கும் வேலையில்லாப் பிரச்சினைக்கும் இடையில் எத்தகைய தொடர்பு காணப்படுகிறது என்பதனை கண்டறிவதாகும். பகுப்பாய்வுக்காக இரண்டாம் நிலைத்தரவுகள் உபயோகிக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் இரண்டாம் நிலைத்தரவுகள் மத்திய வங்கியினது ஆண்டறிக்கைகள், தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்கள அறிக்கைகள், இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கைகள், உயர் கல்வி அமைச்சின் வருடாந்த அறிக்கைகள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், இணையத்தள அறிக்கைகள் என்பவற்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டன. இவ்வாறு சேகரிக்கப்பட்ட தரவுகளாது SPSS புள்ளிவிபரவியல் மென்பொருள் தரவு பொதிகளை பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யப்பட்டு வரைபடங்கள் அட்டவணைகளின் துணையுடன் தரவுகள் சமர்ப்பிக்கப்பட்டள்ளன. இவ்வாய்வின் படி இலங்கையின் கல்விமுறைமைக்கும் வேலையின்மைப் பிரச்சினைக்கும் இடையில் ஒரு எதிர்கணிய தொடர்பு காணப்படுகிறது என்பது முடிவாக பெறப்பட்வுள்ளது.

**Key words**: மனித மூலதனம், அகவய வளர்ச்சி, கல்விமுறைமை, வேலையின்மை, ஊழியப்படை